சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கட்டப்பட்டு வரும்

# 18 புதிய பேருந்து நிலையங்கள் அடுத்தாண்டு மக்கள் பயன்பாட்டிற்கு வரும்!

## கொளத்தூரில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, நவ.3-

நேற்று (2.11.2024) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அகரம், ஜெகநாதன் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சி பன்னோக்கு மையத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற நவம்பர் மாதம் 4ம் தேதி துவக்கப்பட இருக்கின்ற “முதல்வர் படைப்பகம்” முன்னேற்பாடுப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து சி.எம்.டி.ஏ சார்பில் கொளத்தூர் தொகுதியில் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பெரியார் நகர் புதிய பேருந்து நிலையத்தையும், மாதவரம் பேருந்து நிலையத்தையும் மற்றும் சென்னை அண்ணாநகர் கிழக்கு முழு நேர நூலகத்தையும் மேம்படுத்துவதற்காக அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கக்கூடிய மக்களுக்கு உதவி புரிகிற வகையில் அரசின் சார்பில் பயன்படுத்துகின்ற பெரிய துறையாக போக்குவரத்து துறை உள்ளது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த மாதவரம் பேருந்து நிலையத்தை மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி தற்போது விழா காலங்களிலும் கூட அந்த பேருந்து நிலையம் அதிகளவு பயணிகள் பயன்படுத்துகின்ற அளவிற்கு ஒரு நல்ல தரத்தோடு இன்று செயல்பட்டு வருகிறது.

**உலகத் தரத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம்!**

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் கடந்த காலத்தில் துவங்கப்பட்டிருந்தாலும் அ.தி.மு.க. ஆட்சியில் சரியான திட்டமிடல் இல்லாததால் புதிதாக பொறுப்பேற்ற தி.மு.க. அரசு பயணிகளின் தேவைகளை கேட்டு அறிந்து அனைத்து தேவைகளையும் முழுமையாக நிறைவேற்றி தொடர்ந்து வருகின்ற காலங்களில் அந்தப் பேருந்து நிலையத்தின் பயன்பாடு அதிகமாக இருக்கும் என்று கணக்கிட்டு கட்டமைப்புகளை உருவாக்குகின்ற பணி முழுமையாக ஈடுபட்டிருக்கிறது. உலக தரத்தில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் இருக்கிறது என்று விமர்சனம் செய்தவர்கள் கூட தற்பொழுது புகழ்ந்து பேசுகிறார்கள்.

ஆம்னி பேருந்து நிலையத்தை கட்ட வேண்டும் என்ற திட்டமிட்டு 42 கோடி செலவில் ஆம்னி பேருந்து நிலையம் முடிச்சூரில் 95 சதவீத பணிகள் நிறைவுற்று உள்ளது கூடிய விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் கடந்த காலங்களில் பணிகள் தொடங்கப்பட்டிருந்தாலும் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருந்த பணிகளை முழு வீச்சில் செயல்படுத்தி தொடர் ஆய்வினை மேற்கொண்டு பயணிகளின் தேவைக்கிற்காக பல்வேறு புதிய கட்டமைப்புகளை உருவாக்கி மார்ச் மாதத்தில் அந்த பேருந்து நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அனைத்து முயற்சிகளை யும் மேற்கொண்டு வருகிறோம்.



பெரியார் நகர், திரு.வி.க.நகர், முல்லை நகர், அம்பத்தூர் ஆர்கேநகர் போன்ற 7 இடங்களில் புதிய பேருந்து நிலையங்கள் வடிவமைக்கின்ற பணி நடைபெற்று வருகிறது, பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளோடு பேருந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் தொகுதியில் தற்போது கட்டப்பட்டு வரும் பெரியார் நகர் பேருந்து நிலையம் ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மாமல்லபுரத்தில் ஒரு பேருந்து நிலையம், செங்கல்பட்டில் ஒரு பேருந்து நிலையம் புதிய கட்டுமான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது, 18 புதிய பேருந்துகள் கட்டமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2025 டிசம்பருக்குள் 18 பேருந்து நிலையங்களும் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

முடிச்சூரில் கட்டப்பட்டு வரும் ஆம்னி பேருந்து நிலையத்தின் 95 சதவீத பணிகள் நிறைவுற்றுள்ளது விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அந்த பேருந்து நிலையத்தை திறக்க உள்ளார். முதலமைச்சர் தொகுதியில் கட்டப்பட்டு வரும் பெரியார் நகர் பேருந்து நிலையம் 2025 ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும். சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் 18 புதிய பேருந்து நிலையங்கள் அடுத்த ஆண்டு டிசம்பருக்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும்.

“திருச்செந்தூர் கந்த சஷ்டி திருவிழாவிற்கு ஒட்டுமொத்தமாக 14 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பு பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் தயார் நிலையில் உள்ளது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 79 முருகன் கோவில்களில் குடமுழுக்கு நடந்துள்ளது, 7 முருகர் கோவிலில் பெருந்திட்ட வரைவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ் கடவுள் முருகனுக்கு எந்த ஆட்சியும் செய்யாத பெருமையை இந்த ஆட்சி செய்துள்ளது.

**கந்த சஷ்டி பாராயணம்!**

திருச்செந்தூர் கந்த சஷ்டி திருவிழாவான 7ஆம் தேதி 6 லட்சம் பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, திருக்கல்யாணத்திற்கு 2 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக கந்த சஷ்டி விழாவிற்கு 14 லட்சம் பக்தர்கள் வந்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது அந்த பக்தர்களுக்கு தேவையான கழிப்பிட வசதி தீயணைப்பு வாகனம் குடிநீர் வசதி அனைத்து வசதிகளும் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது, கந்த சஷ்டி திருநாளில் 12 திருக்கோவில்களில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் இருக்கக்கூடிய மாணவ, மாணவிகளும் இசைக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள் 738 பேரை வைத்து கந்த சஷ்டி பாராயணமும் படிக்கப்பட உள்ளது, இன்று மாலை திருவான்மியூர் பாம்பன் சுவாமி கோவிலில் கந்த சஷ்டி பாராயணத்தை நான் தொடங்கி வைக்க இருக்கிறேன்.

**முதல்வர் படைப்பகம்!**

“முதல்வர் படைப்பகம்” என்ற பெயரில் சென்னை பெருநகர மாநகராட்சியும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் இணைந்து சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தமிழக முதல்வர் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை கொண்டு புதிதாக “முதல்வர் படைப்பகம்” என்பதை வருகின்ற நவம்பர் 4ஆம் தேதி துவக்கி வைக்க உள்ளார்கள். நம்முடைய துறையினுடைய செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார் ஆகியோர் ஒருங்கிணைந்து முன்னேற்பாடு பணிகள் குறித்து நேற்று ஆய்வினை மேற்கொண்டோம்.

இவ்வாறு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், நந்தகோபால், கூ.பீ.ஜெயின், மாநகராட்சி மண்டல அலுவலர்கள் ஏ.எஸ்.முருகன், திருமுருகன், டிஆர்ஓ சுரேஷ், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் பாலமுருகன், செயற்பொறியாளர்கள் செந்தில்நாதன், ராஜன் பாபு, மாவட்ட நூலக அலுவலர் திருமதி கவிதா, உள்ளாட்சி பிரதிநிதிகள் ஐ.சி. எப்.முரளி, சந்துரு, மகேஷ் குமார், புழல் நாராயணன், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.தாவுத்பீ, திருமதி. ஜான்சி ராணி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியத் தேர்தல் ஆணையம், இந்திய தேசியக் காங்கிரஸ் மீது தாக்குதல் தொடுத்துள்ளதே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; அரியானா மாநிலத் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் செய்த குளறுபடிகள் தொடர்பாகவே இந்த மோதல்.**

**இந்திய அரசியல் சட்ட அடிப்படையிலான ஆணையம், சந்தேகங்களுக்குத் தக்க விளக்கம் அளித்திட வேண்டிய கடமையை நேர்மையாக நிறைவேற்ற வேண்டிய இடத்தில் இருக்கிறது. ஆனால், அத்தகைய கடமையிலிருந்து தேர்தல் ஆணையம் தவறி விட்டதோ என்ற அய்யப்பாடு அரசியல் சாராதோர் இடையேயும் எழுந்துள்ளது.**

**அரசியல் சட்ட அமைப்புகளையெல்லாம், ஒன்றிய பா.ஜ.க. அரசு கையில் எடுத்துக்கொண்டு விட்டதோ என்ற கவலை பல்வேறு முனைகளிலும் படர்ந்துவிட்டது.**

**“மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம்; கங்கையே சூதகமானால், எங்கே போவது ?” என்று பசும்பொன் தேவர் திருமகனார் சொன்னதை எடுத்துக்காட்டி, அன்றொருநாள் கலைஞர் தொடுத்த வினாக் கணை, இன்றளவும் பாய்ந்து கொண்டுதானே இருக்கிறது ! வினாவுக்கு விடை எங்கே ?**

திராவிட மாடல் அரசு

# பெண்களுக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தால் விற்பனை அதிகரிப்பு!

சென்னை, நவ.3-

இந்த தீபாவளிக்கு ஜவுளி அதிகமாக விற்பனை செய்ததற்கு தமிழக அரசு பெண்களுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருவதும் ஒரு காரணமாக கூறப்படுகிறது.

இந்த பணத்தை சேமித்து வைத்து, பெண்கள் அதிகமாக கடைகளுக்குச் சென்று ஜவுளி, பட்டாசு, இனிப்புகள் என்று தீபாவளிக்கு அதிக அளவில் பொருட்களை வாங்கிச் சென்றனர்.

ஆண்களை எதிர்பார்க்காமல் தங்களுடைய கையில் பணம் இருந்ததால், தீபாவளியை அவர்கள் சிறப்பாக கொண்டாடியுள்ளனர். மக்களிடம் அதிக அளவில் பணம் புழங்கியதால் விற்பனை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! செ.தமிழ்வேந்தன் தலைமை!

# திரு.வி.க. நகர் வடக்கு பகுதி சார்பில் கருத்தியல் தொடர் பேச்சரங்கம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி - மாறன் - பம்மல் வீ.தினேஷ் சிறப்புரை!

சென்னை, நவ. 3 -

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கம் நடைபெறுகிறது.

இதில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, இளம் பேச்சாளர்கள் மாறன், பம்மல் வீ.தினேஷ் உரையாற்றுகிறார்கள்.

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் வழிகாட்டுதல்படி, கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் “என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பேச்சு போட்டியில் பட்டைத் தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் பங்கேற்கும் கருத்தியல் தொடர் பேச்சரங்கம், 4.11.2024, மாலை: 6.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஹேம்ராஜ்பவனில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், டாக்டர். கலாநிதி வீரசாமி எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமி கண்ணு, புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட். ஆசாத் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி, லயன். பி.உதயசங்கர், பி.ஜெ. துளசிங்கம், டி.லோகேஷ், நா.துலுக்காளம், பெரம்பூர்.ஆர்.மகேஷ், இரா.வீரமணி, எம்.பெரோஷ்கான், கா.ராஜ்முகமதுஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் தலைமை வகிக்கிறார்.

தில்லை.கதிரவன், புல்லட்.கி.ரமேஷ், ஆர்.ராஜன், புவனவதி, கிணார். ஆறுமுகம், எஸ்.புஷ்பராஜ், எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், ஜி.கிருஷ்ண குமார், சே.மணிமாறன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பேச்சரங்கத்தில், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, இளம் பேச்சாளர்கள் மாறன் “அறமும் அன்பும் எங்கள் கண்கள்” என்ற தலைப்பிலும் பம்மல் வீ.தினேஷ் அவர்கள் “பெண்மையை போற்றுவோம்” என்ற தலைப்பிலும் உரையாற்றுகிறார்கள்.

மேலும், கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஜி. ஜெ.பிரபு ஆர்.டி.சங்கர் நானா, வானவில் விஜய், புரசை.தாமோதரன், ஜி.சாந்தகுமாரி, சுதா தீனதாயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர். ஜி.வி.நாகவள்ளி, LPF.மோகன், துரைகண்ணன், பி.விஜயகுமார், எம்.விநாயகம்.

மாமன்ற உறுப்பினர்கள்: மு.சரவணன், ரமணி லோகேஷ், எஸ்.தமிழ்செல்வி. திரு.வி.க. நகர் தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பொல்லு. டி.சுரேஷ் எம்.தமீம், எஸ். வெங்கடேசன், வி.கா. வெங்கடேசன் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். இப்பேச்சரங்கத்தில் வட்ட கழக செயலாளர்கள்: மா.ருத்ரமூர்த்தி, பரிமளா சுரேஷ்பாபு நன்றி தெரிவிப்பார்கள்.

புல்லரம்பாக்கம் கிராமத்தில்

# மகளிர் கபடி போட்டி! குதிரை வெள்ளோட்ட பந்தயம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைக்கிறார்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ பங்கேற்பு!

திருவள்ளூர், நவ.3-

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ.உமா மகேஸ்வரன் ஏற்பாட்டில் மகளிருக்கான கபடி போட்டி மாபெரும் ரேக்கலா குதிரை வெள்ளோட்ட பந்தயம் புல்லரம்பாக்கம் பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறுகிறது.

இதில் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, அக்னி மா. செ.ராஜேஷ், தெ. பிரியா குமார் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் கபடி போட்டி மற்றும் ரேக்ளா குதிரை வெள்ளோட்ட நிகழ்ச்சிகளை தொடங்கி வைக்கிறார்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், மாநில மாவட்ட நிர்வாகிகள் மா.இராஜி சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், வி. ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஊராட்சிக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உதயநிதி ரசிகர் மன்றம் நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கிறார்கள்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (2.11.2024) சென்னை, கொளத்தூர் தொகுதியில் சி.எம்.டி.ஏ சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பெரியார் நகர் புதிய பேருந்து நிலையத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், சி.எம்.டி.ஏ. கண்காணிப்புப் பொறியாளர் திரு.பாலமுருகன், செயற்பொறியாளர்கள் செந்தில்நாதன், ராஜன் பாபு, பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், சந்துரு. மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.தாவுத்பீ மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட வீரலப்பட்டி ஊராட்சியில் அ.தி.மு.க. உள்ளிட்ட மாற்றுக்கட்சியினர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் ஒன்றியசெயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜ், மாவட்டத் துணைச்செயலாளர் ராஜாமணி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவபாக்கியம் ராமசாமி, மாவட்ட மகளிர்அணி அமைப்பாளர் மலர்விழிச்செல்வி, ஊராட்சிமன்ற தலைவர்கள் வேலுச்சாமி, சாரதாசிவராஜ், பன்னீர்செல்வம், ரத்தினம் மா.செல்வராஜ், ரேணுகாதேவிசேது ராஜன், ஒன்றிய கவுன்சிலர்ரேவதி சேகர், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக்வேலுச்சாமி, ரெட்டியபட்டிஊராட்சி மன்றதுணைத் தலைவர் முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.